**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 05.11.2025**
**OS. No. 205/2015**
**வழக்கு சாட்சி PW.2– செல்வராஜ், த/பெ.மாரியப்பன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) ஏற்கனவே இந்த வழக்கில் வாதி தரப்பில் மூன்றாம் நபர் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த சாட்சியத்தில் நான் அளித்துள்ள முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணையை தொடர்ந்து தான் தற்போது சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். 1வது சாட்சியாக என் தந்தை மாரியப்பன் சாட்சியம் அளித்துள்ளார்எ ன்றால் சரிதான். அவரது சாட்சியமும் இந்த வழக்கில் நாங்கள் எடுத்து கொள்கிறோம் என்றால் சரிதான். 1வது வாதி இறந்துவிட்டப்படியால் அவரது வாரிசுகளாக 2 முதல் 6 வரையிலான வாதிகள் வழக்கில் சேர்க்கப்பட்டு இந்த வழக்கை நடத்தி வருகிறோம் என்றால் சரிதான். நான் தற்போது எனக்காகவும், மற்ற வாதிகளுக்கும் சார்பாகவும் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான்.

2) சூரப்பள்ளி கிராம ச.எண்.252/5 ல் உள்ள 10 செண்ட் நிலத்தில் வீடு உள்ளதாக கூறி, அதற்கு ஆதாரமாக வீட்டுவரி ரசீதுகள், மின் இணைப்பு ரசீதுகள் ஆகியவற்றை ஒப்படைத்துள்ளோம் என்றால் சரிதான். கிராம நிர்வாக அதிகாரியையும் ஒரு சாட்சியாக எங்கள் தரப்பில் விசாரித்து, அவரும் வீடு இருப்பதை உறுதிபடுத்தி சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான். ஆனால் தாவா சொத்து விவரத்தில் வீடு உள்ளதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்யுமாறு இந்த வழக்கில் பரிகாரம் கேட்டுள்ளோம் என்றால் சரிதான். நிலத்திற்கு மட்டும் தான் மதிப்பீடு செய்து, நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளேன் என்றும், தாவா சொத்திலுள்ள வீட்டை கணக்கில் காண்பிக்கவில்லை என்றும், அதற்குண்டான நீதிமன்ற கட்டணமும் செலுத்தவில்லை என்றால் நான் தற்போது செலுத்த தயாராக உள்ளேன்.

3) தாவா சொத்திலுள்ள வீட்டின் தற்போதைய மதிப்பு எவ்வளவு என்றால் சுமார் ரூ.2 லட்சம் இருக்கும். தற்போது அந்த வீட்டில் யார் உள்ளார்கள் என்றால் என் தந்தை 1ம் வாதி இருந்தார், அவர் இறந்த பிறகு பூட்டி வைத்து நாங்கள் பராமரித்து வருகிறோம். ச.எண்.252/5 க்கும், ச.எண்.252/10, 11 க்கு இடையில் ச.எண்.252/8, ச.எண்.252/9 மற்றும் ச.எண்.252/12 ஆகியவை உள்ளது. மேற்கண்ட ச.எண்.252/8, ச.எண்.252/9 மற்றும் ச.எண்.252/12 ஆகியவை யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் என் தந்தை மாரியப்பனுக்கு பாத்தியப்பட்டது. மேற்கண்ட ச.எண்.252/8, ச.எண்.252/9 மற்றும் ச.எண்.252/12 ஆகியவை எங்கள் பெயரில் தான் உள்ளது, அது குறித்து எந்த பிரச்சனையும் இல்லாததால் அதை வழக்கில் சேர்க்கவில்லை. தாவாசொத்தில் மேற்கண்ட மூன்று சர்வே எண்களை மறைத்து மற்ற சர்வே எண்களுக்கு ஒரே சக்குபந்தியை தான் காண்பித்துள்ளோம் என்றால் அந்த சொத்துக்களுக்கு அந்த ஒன்று தான் சக்குபந்தி ஆகும்.

4) கிராம நிர்வாக அலுவலர் தாக்கல் செய்த புலவரைபடத்தில் நான் சொல்லும் வீடு காண்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல, காண்பிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட கிராம நிர்வாக அலுவலர் மீது நீதிமன்றத்தில் தவறாக திருத்தப்பட்ட ஆவணங்களை தாக்கல் செய்து, பொய்யாக சாட்சியம் அளித்ததற்கு அவரது உயர் அதிகாரியான கோட்டாட்சியரிடம் புகார் நிலுவையிலுள்ளது என்றால் எனக்கு தெரியாது. ச.எண்.252/5 ல் வீடு இல்லை என்றும், நான் வேறு சர்வே எண்ணிலுள்ள வீட்டின் வரி ரசீதுகளை தாக்கல் செய்து, பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, ச.எண்.252/12 ல் இரு வீடுகள் உள்ளது. ச.எண்.252/10 ல் ஒரு வீடு உள்ளது, ச.எண்.252/5 ல் உள்ள வீடு தற்போது இடிந்த நிலையில் உள்ளது. மேற்கண்ட வீடுகளின் மதிப்பு எவ்வளவு என்றால் சுமார் ரூ.1 லட்சம் ஆகும். மேற்கண்ட வீடுகளும் சொத்து விவரத்தில் காண்பிக்கவில்லை என்றால் சரிதான். சாட்சி தற்போது ரூ.2 லட்சம் மதிப்புள்ள வீடு உள்ளதாக மேற்கண்ட சாட்சியில் சொன்னது ச.எண்.252/10 ல் உள்ள வீடு என்று தற்போது தெரிவிக்கிறார்.

5) 1941ல் எங்கள் குடும்பத்திற்குள் ஏற்பட்டதாக சொல்லப்படும் பாகபிரிவினை குறித்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு தெரியவில்லை, ஒருவேளை தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்கிறேன். இதே நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அ.வ.எண்.107/2022 என்ற வழக்கில் நாங்கள் பிரதிவாதிகள் என்றால் சரிதான். மேற்படி வழக்கு நிலுவையில் தான் உள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் நானும், என் தந்தை மட்டும் தான் தரப்பினர்கள் என்றால் சரிதான், என் தந்தை இறந்த பிறகு மற்ற வாரிசுகளை சேர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டி நிலுவையிலுள்ளது. சரியான சொத்து விவரம் குறிப்பிடாமல் முறையாக மதிப்பீடு செய்து, நீதிமன்ற கட்டணம் செலுத்தாமல், உரிய தரப்பினர்களை சேர்க்காமல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. தவறான ஆவணங்களை தாக்கல் செய்து, பிரதிவாதிகளின் சொத்தை அபகரிக்கவேண்டி வழக்கு நடத்திவருகிறோம் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கும் எங்களுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வம்சாவளி பட்டியலில் வெங்கட்ராமன் மகன் முனியப்பன் என்று காண்பித்துள்ளோம் என்றால் சரிதான், அவர் என் சித்தப்பா ஆவார், 1ம் பிரதிவாதியை அவ்வாறு காண்பிக்கவில்லை, அவர் தற்போது இறந்துவிட்டார், அவரது இறப்பு சான்றிதழும் எங்களிடம் உள்ளது. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஓம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.